# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 02 | Issue: 12 | 4 Pages | 12.8.2024 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 12 | 4 பக்கங்கள் | 12.8.2024 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துவதில் இரட்டை நிலைப்பாட்டில் ஈரான்



தெஹ்ரான், ஆக. 12

ஈரானின் புதிய அதிபராக மசூத் பெஜஸ்கியான் சமீபத்தில் பதவியேற்று கொண்டார். இந்நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த ஹமாஸ் அமைப்பின் தலைவரானஇஸ்மாயில்ஹனியேதெஹ்ரானில்வைத்துகொல்லப்பட்டார். இதனால், அந்த பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

ஈரானின் இறையாண்மையை மீறிய செயல் என அந்நாடு ஒரு புறம் கண்டனம் தெரிவித்து உள்ளது. இந்த நிலையில், ஈரானின் இஸ்லாமிய புரட்சி காவல் படை (ஐ.ஆர்.ஜி.சி.) வீரர்கள், டெல் அவிவ் நகரம் மற்றும் இஸ்ரேலின் பெரிய நகரங்கள் மீது நேரடியான மற்றும் கடுமையான ஏவுகணை தாக்குதல்களை நடத்த திட்டமிட்டு உள்ளது.

ஆனால், ஐ.ஆர்.ஜி.சி. ஆதரவுடன் அதிபராகியுள்ள பெஜஸ்கியானோ, இஸ்ரேலுக்கு வெளியே அமைந்துள்ள மொசாட் அமைப்பின் தளங்கள் மீது தாக்குதல் நடத்தும்படி வலியுறுத்தி உள்ளார். அதிலும், அஜர்பைஜான் குடியரசு மற்றும் ஈராக்கி குர்திஸ்தான் உள்ளிட்ட அண்டை பகுதிகளை இலக்காக கொண்டு தாக்குதல் நடத்த கூறியுள்ளார்.

இதனால், இஸ்ரேலுடனான முழு அளவிலான போருக்கான ஆபத்து குறையும் என்று அவர் நம்புகிறார். இஸ்ரேல் மீது நடத்தப்படும் எந்தவொரு நேரடி தாக்குதலும், ஈரானுக்கு எதிரான கடுமையான விளைவுகளை ஏற்படுத்த கூடும் என அவர் அஞ்சுகிறார் என அவருடைய நெருங்கிய உதவியாளர், தி டெலிகிராப் செய்தி நிறுவனத்திடம் கூறியுள்ளார்.

## 200க்கும் மேற்பட்ட ரோகிங்கியா அகதிகள் டிரோன் தாக்குதலில் பலி



நைபிடா, ஆக. 12

மியான்மர் நாட்டில் இருந்து ரோகிங்கியா முஸ்லிம்கள் அகதிகளாக வங்காளதேச நாட்டுக்கு தப்பி செல்கின்றனர். 2017ம் ஆண்டில் இருந்து இதுவரை7.3லட்சத்திற்கும்மேற்பட்டோர்அகதிகளாகதப்பிசெனறுள்ளனர். இந்நிலையில், எல்லை பகுதியில் தப்பி செல்வதற்காக முயன்ற அகதிகளில் பலர் டிரோன் (ஆளில்லா விமானம்) தாக்குதலில் உயிரிழந்து உள்ளனர்.

கிளர்ச்சியாளர்களுக்கும், மியான்மர் ராணுவத்திற்கும் இடையே நடந்து வரும் மோதலில் அகதிகள் கொல்லப்பட்டு உள்ளனர் என கூறப்படுகிறது. எனினும், இரு தரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டு கூறுகின்றனர்.

இந்த தாக்குதல் பற்றிய வீடியோக்கள் சமூக ஊடகங்களில் பரவி வருகின்றன. அதில், அகதிகளின் உடைமைகள் தரையில் அங்கொன்றும், இங்கொன்றும் எனபரவி கிடக்கின்றன. அதன்அருகேஅவர்களின்உடல்கள் குவியலாக கிடக்கின்றன.

இதில் உயிர் தப்பிய 3 பேர் கூறும்போது, 200க்கும் மேற்பட்டோர் உயிரிழந்து உள்ளனர் என தெரிவித்து உள்ளனர். எனினும், இந்த வீடியோ எடுக்கப்பட்டசரியானதேதிஉள்ளிட்டவிவரங்கள்வெளியிடப்படவில்லை.

இதில் தப்பி வந்த முகமது எலியாஸ் (வயது 35) குடும்பத்தினருடன், கடற்கரையோரம் நின்றிருந்தபோது நடந்த தாக்குதலில் அவருடைய கர்ப்பிணியான மனைவியும், 2 வயது மகளும் படுகாயமடைந்தனர். எனினும், பின்னர் அவர்கள் உயிரிழந்து விட்டனர் என கூறியுள்ளார்.

இந்த தாக்குதலின்போது, அவர் தரையில் படுத்து உயிர் தப்பி விட்டார். ஆனால், மனைவியும், மகளும் அவரின் கண்ணெதிரே காயமடைந்து உயிரிழந்து விட்டனர். இதுபோன்று பல்வேறு நபர்களும் தாக்குதலில் உயிரிழந்து உள்ளனர்.

மியான்மரில் இருந்து முஸ்லிம் சிறுபான்மையினரான ரோகிங்கியாக்கள் படகுகளில் தப்பி சென்றபோது, நப் ஆற்றில் படகுகள் கவிழ்ந்தும் பலர் உயிரிழந்து உள்ளனர். இதனை வங்காளதேச ஊடகங்களும் தெரிவித்து உள்ளன.

## பாலஸ்தீனத்தில் பள்ளி மீது இஸ்ரேல் தாக்குதல்; 100 பேர் பலி

ஜெருசலேம், ஆக.12

இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்தின் காசா முனையை கட்டுப்பாட்டில் வைத்து இருக்கும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே, 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் போர் வெடித்தது. ஹமாஸ் அமைப்பினரை முழுமையாக ஒழித்து கட்டுவோம் என இஸ்ரேல் தாக்குதலை நடத்தி வருகிறது. காசாவில் இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலில், பெண்கள், குழந்தைகள் உட்பட, 30,000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கிழக்கு காசாவின் தராஜ் மாவட்டத்தில் உள்ள ஒரு பள்ளியின் மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தி உள்ளது. இதில் 100 பேர் பலியாகினர். 50க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பள்ளியில் ஏராள மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளதை தெரிந்து, இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது என ஹமாஸ் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

# உஷார்... இப்படியெல்லாமா நடக்கும்... உரிமையாளருக்கு தெரியாமல் வேனை விற்பனை செய்த பலே கில்லாடிகள்

திருப்பத்தூர், ஆக. 12

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர், பி,கஸ்பா பகுதியை சேர்ந்தவர் எழில்குமார் . இவர் தொழிற்சாலைகளுக்கு தொழிலாளர்களை ஏற்றி செல்ல ஒப்பந்த அடிப்படையில் தனக்கு சொந்தமான வேனை வாடகைக்கு விட்டு தொழில் செய்து வந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஏழில்குமாருக்கு விபத்து ஏற்பட்டு காலில் காயம் ஏற்பட்டதால் தன்னுடன் நண்பராக பழகி வந்த நாச்சார்குப்பம் பகுதியை சேர்ந்த சக்திவேல் என்பவரின் வீட்டின் முன் வேனை பார்க்கிங் செய்து வைத்துள்ளார். சில மாதங்களாக சக்திவேல் வீட்டின் முன் இருந்த வேன் கடந்த 3 ஆம் தேதி திருடு போனதாகவும், அதனை 6 ஆம் தேதி சக்திவேல் வேன் உரிமையாளர் எழில்குமாருக்கு தகவல் கொடுத்துள்ளார். தகவலின் பெயரில் அங்கு சென்று




பார்த்த போது வேன் இல்லாததால் அதிர்ச்சியடைந்த எழில் குமார் ஆம்பூர் கிராமிய காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில் சக்திவேல் மீது சந்தேகம் அடைந்த போலீசார் சக்திவேலைபிடித்துவந்துகிடுக்கிப்பிடி விசாரணை மேற்கொண்டனர். போலீசாரின் விசாரணையில், வேன் உரிமையாளருக்கு தெரியாமல் சக்திவேல் சாத்தம்பாக்கம் பகுதியை சேர்ந்த அன்பரசன் என்பவர் மூலமாக 80 ஆயிரம் ரூபாய்க்கு தட்டப்பாறை பகுதியை சேர்ந்த சிலம்பரசன் என்பவருக்கு விற்பனை செய்ததாகவும், சிலம்பரசன் சில நாட்களில் திருப்பத்தூர் மாரியம்மன் கோவில் பகுதியை சேர்ந்த கார்த்திக் என்பவருக்கு விற்பனை செய்தது போலீசார் விசாரணையில் தெரிய வந்தது .

இதனை தொடர்ந்து நான்கு பேர் மீதும் வழக்கு பதிவு செய்த போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைத்தனர். நண்பராக பழகியவரை நம்பி வேனை பார்க்கிங் செய்து வைத்த நிலையில் வேன் உரிமையாளருக்கு (நண்பருக்கே) தெரியாமல் வேனை விற்பனை செய்து விட்டு நாடகமாடிய நண்பன் உட்பட நான்கு பேர் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்ட சம்பவம் ஆம்பூர் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தியுள்ளது

# 'காதலிக்காக திருடினேன் சார்' போலீசாரிடம் சிக்கிய பைக் திருடன்



கும்பகோணம், ஆக. 12

கும்பகோணத்தில் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளில் மோட்டார் சைக்கிள் திருட்டு தொடர்கிறது. குறிப்பாக கண்காணிப்பு கேமராக்கள் இல்லாத பகுதிகளை குறிவைத்து மோட்டார் சைக்கிள் திருட்டு சம்பவங்கள் தொடர்ந்தன. மோட்டார் சைக்கிள் திருடு போனதாக கும்பகோணம் போலீசில் புகார் செய்யப்பட்டது. இதையடுத்து கும்பகோணம் துணை போலீஸ் சூப்பிரண்டு கிருத்திவாசன் உத்தரவின் பேரில் கிழக்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் சிவ செந்தில்குமார், தனிப்படை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் கீர்த்திவாசன் ஆகியோர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர். திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட முன்னாள் குற்றவாளிகள் கொடுத்த தகவலின் பேரில் நாச்சியார்கோவில் போலீசார் சரகம் அம்மங்குடி புத்தகரம் தெற்கு தெருவை சேர்ந்த கலியமூர்த்தி மகன் மணிகண்டனை (வயது 28) கைது செய்து விசாரித்தனர். விசாரணையில் அவர் கும்பகோணத்தில் பல்வேறு இடங்களில் ஈடுபட்டது தெரிய வந்தது.

இதையடுத்து தனிப்படை போலீசார் மணிகண்டனை கைது செய்து அவரிடம் இருந்து ரூ.3 லட்சம் மதிப்புள்ள 8 மோட்டார் சைக்கிள்களை பறிமுதல் செய்தனர். மணிகண்டனிடம் நடத்திய விசாரணையில், காதலி அடகு வைத்த நகைகளை மீட்பதற்காக மோட்டார் சைக்கிள்களை திருடியதாகவும், இதுவரை 8 மோட்டார் சைக்கிள்களை திருடியதாகவும் போலீசாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# திருத்துறைப்பூண்டி நூற்றாண்டு அரிமா சங்கம் சார்பில் உலக தாய்ப்பால் வார விழா





திருவாரூர், ஆக. 12

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் உலகதாய்ப்பால் வாரவிழா, திருத்துறைப்பூண்டி நூற்றாண்டு அரிமா சங்கம் சார்பில் , சுமார் 35 கர்ப்பிணி தாய்மார்களுக்கு இலவசமாக ஊட்டச்சத்து நிறைந்த பழங்கள், பேரிச்சை பழங்கள் மற்றும் உணவு வகைகள் அடங்கிய தொகுப்புகளை வழங்கி மிகச்சிறப்பாக திருத்துறைப்பூண்டி நகர அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு நூற்றாண்டு அரிமா சங்கத் தலைவர் அரிமா.தங்கமணி தலைமை தாங்கி தாய்ப்பால் மகத்துவம் பற்றி எடுத்துரைத்தார் . மருத்துவர் அஜித் முன்னிலை வகித்து தாய்ப்பாலின் அவசியம் பற்றி எடுத்துரைத்தார்.ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல் நிறுவனர் முனைவர் துரைராயப்பன் தாய்ப்பால் பற்றிய விழிப்புணர்வை தாய்மார்களுக்கு ஏற்படுத்தி சிறப்புரையாற்றினார். அரிமா சங்க பொருளாளர் நவீன் குமார் அனைவரையும் வரவேற்றார். நூற்றாண்டு அரிமா சங்க முன்னாள் தலைவர் கார்த்திகேயன், முன்னாள் செயலாளர் சிவகுருநாதன், முன்னாள் பொருளாளர் ரகுவரன், உறுப்பினர்கள் அரிமா பார்த்திபன், அரிமா சீனிவாசபாபு, அரிமா மாதவன் மற்றும் 13 க்கும் மேற்பட்ட செவிலியர்கள் மற்றும் மருத்துவ பரிசோதனை ஊழியர்கள் , பணியாளர்கள் ஆகியோர் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர். இறுதியாக சங்க உறுப்பினர் அகல்யா மணி அனைவருக்கும் நன்றி கூற, தாய்ப்பால் வார விழா இனிதே நிறைவு பெற்றது.






மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்தில் தனியார் மண்டபத்தில் ஆவின் ஓய்வு பெற்ற பணியாளர்களின் நல சங்கம் கூட்டம் நடைபெற்றது இதில் மதுரை மாவட்ட சங்க தலைவர் ரகுராமன் செயலாளர் பாண்டியன் ஆகியோர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இந்தகூட்டத்தில்சுமார்70க்கும்மேற்பட்டஓய்வுபெற்றபணியாளர்கள் மற்றும் வேறு மாவட்ட பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் பல கோரிக்கைகளை வலியுறுத்தி உரையாற்றினார்கள்..

# ஐ.எஸ். பயங்கரவாதி கைது எதிரொலி: தமிழகத்தில் சுதந்திர தின பாதுகாப்புக்கு 1 லட்சம் போலீசார்

சென்னை, ஆக. 12

நாடு முழுவதும் வருகிற 15ந்தேதி நடைபெறஉள்ள சுதந்திர தின கொண்டாட்டத்தையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகளைபலப்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அனைத்து மாநிலங்களிலும் உஷார் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதைத் தொடர்ந்து டெல்லியில் நடைபெற்ற வேட்டையில் ஐ.எஸ். பயங்கரவாதியான ரிஸ்வான் அலி என்பவர் கைது செய்யப்பட்டிருப்பது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. கடந்த சில நாட்களாக ரிஸ்வான் அலி டெல்லியில் முக்கிய பிரமுகர்களின் வீடுகளை நோட்டமிட்டது தெரிய வந்ததையடுத்து டெல்லி முழுவதும் போலீசார் உஷார்படுத்தப்பட்டு உள்ளனர்.

அதே நேரத்தில் மற்ற மாநிலங்களிலும் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் வேகப்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் தமிழகம் முழுவதும் 1 லட்சத்துக்கும் அதிகமான போலீசார் சுதந்திர தின பாதுகாப்பு பணிகளில் இப்போதே ஈடுபட தொடங்கி உள்ளனர்.



சுதந்திர தின கொண்டாட்டங்களுக்கு இன்னும் 4 நாட்களே இருக்கும் நிலையில் போலீஸ் டி.ஜி.பி. சங்கர் ஜிவால் உத்தரவின் பேரில் மாநிலம் முழுவதும் போலீஸ் சூப்பிரண்டுகள் உள்ளிட்ட அதிகாரிகள் பாதுகாப்பு ஏற்பாடுகளை முடுக்கி விட்டுள்ளனர்.

சுதந்திர தினத்தையொட்டி ரெயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள் உள்ளிட்ட பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கூடுதல் போலீசார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பணிகளை கவனமாக மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கோயம்பேடு மார்க்கெட், கிளாம்பாக்கம் பஸ் நிலையம் உள்பட மாநிலம் முழுவதும் உள்ள முக்கிய மார்க்கெட்டுகளிலும் போலீசார் ரோந்து சுற்றி வந்து சந்தேகத்துக்கிடமாக யாராவது சுற்றி திரிகிறார்களா? என்பதை கண்காணிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

சுதந்திர தினத்தையொட்டி சென்னை கோட்டையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொடியேற்றுவார். இதையொட்டி போலீஸ் அணிவகுப்பும் நடைபெறும். இதனால் கோட்டையை சுற்றியுள்ள பகுதிகளிலும் போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. கடலோர பாதுகாப்பு படையினரும் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

சென்னை முதல் குமரி வரை கடலோர பகுதிகள் அனைத்திலும் போலீசார் தீவிரமாக கண்காணிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கடல் வழியாக மர்ம நபர்கள் யாரும் ஊடுருவி விடக்கூடாது என்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகரம் முழுவதும் 15 ஆயிரம் போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

# ஆழியார், பரம்பிக்குளம் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

பொள்ளாச்சி, ஆக. 12

கோவை மாவட்டம் பொள்ளாச்சி, வால்பாறை உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு வரை மழை பெய்து வந்தது.

மழை பெய்ததால் பொள்ளாச்சி மற்றும் வால்பாறையில் உள்ள அணைகளுக்கு தண்ணீர் அதிகளவு வந்து கொண்டிருந்தது.

பொள்ளாச்சி அடுத்துள்ள ஆழியார், பரம்பிக்குளம் அணைகளுக்கும் மழை காரணமாக தண்ணீர் அதிகளவு வந்தது. தொடர்ந்து தண்ணீர் வரத்து அதிகரிக்கவே ஆழியார், பரம்பிக்குளம் அணைகள் அடுத்தடுத்து நிரம்பின.



அணைகள் நிரம்பியதை தொடர்ந்து, பாதுகாப்பு கருதி அணையில் இருந்து மதகுகள் வழியாக தண்ணீர் வெளியேற்றப்பட்டு வந்தது.

இந்த நிலையில் மேற்கு தொடர்ச்சி மலையில் தற்போது மழையின் அளவு குறைந்து விட்டது. இருந்தாலும் அணைகளுக்கு வரும் தண்ணீர் அளவு தொடர்ந்து அதிகரித்த வண்ணமே உள்ளது.

120 அடி கொண்ட ஆழியார் அணையின் நீர்மட்டம் தற்போது 119.40 அடியாக உள்ளது. அப்பர் ஆழியார் அணையில் இருந்தும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் வினாடிக்கு 1000 கன அடி நீர் வருகிறது.

இதன் காரணமாக அணையில் இருந்து வினாடிக்கு 1000 முதல் 1200 கன அடி வரை உபரிநீர் வெளியேற்றப்பட்டது. சில மணி நேரங்களில் நீர் வெளியேற்றுவதும் நிறுத்தப்பட்டது.

அதேபோல டாப்சிலிப்பை அடுத்துள்ள பரம்பிக்குளம் அணைக்கும் நீர்வரத்து அதிகமாக உள்ளது. 78 அடி கொண்ட அணையின் நீர்மட்டம் தற்போது 68 அடியாக உள்ளது.

வினாடிக்கு 2 ஆயிரம் கன அடி தண்ணீர் வரத்து உள்ளது. 900 கனஅடி தண்ணீர்திருமூர்த்திஅணைக்கு திறக்கப்படுகறது. தொடர்ந்து ஒரு மாதத்திற்கும் மேலாக ஆழியார், பரம்பிக்குளம் அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# நாகை - இலங்கை இடையே மீண்டும் பயணிகள் கப்பல் போக்குவரத்து சோதனை ஓட்டம்

நாகப்பட்டினம், ஆக. 12

நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு மீண்டும் கப்பல் போக்குவரத்து சேவை தொடங்குவதற்காக அந்தமானில் இருந்து கொண்டு வரப்பட்ட 'சிவகங்கை' என்ற பெயரிடப்பட்ட கப்பல் சென்னை வழியாக நாகப்பட்டினம் துறைமுகத்திற்கு (6ம்தேதி) வந்தது.

இதை தொடர்ந்து நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு கப்பல் சேவை வரும் 15ம் தேதிக்கு பின்னர் தொடங்கப்படவுள்ளது. சோதனை ஓட்டம் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில் பருவகால சூழ்நிலை காரணமாக சோதனை ஓட்டம் நிறுத்தப்பட்டிருந்தது.




இதையடுத்து நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இன்று காலை 8 மணி அளவில் சிவகங்கை பயணிகள் கப்பல் சோதனை ஓட்டம் துவங்கியது. நண்பகல் 12 மணி அளவில் இலங்கை காங்கேசன் துறைமுகத்திற்கு சென்றது. மீண்டும் 4 மணிக்கு நாகைக்கு வரும்.

கடந்தாண்டு தொடங்கிய கப்பல் சேவை, நிறுத்தப்பட்ட நிலையில் மீண்டும் கப்பல் போக்குவரத்து தொடங்க இருப்பது இரு நாட்டை சேர்ந்த வணிகர்கள், சுற்றுலா பயணிகள் இடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. 'சிவகங்கை' கப்பலில் சாதாரண வகுப்பில் 133 இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு நபருக்கு ரூ.5 ஆயிரம் கட்டணமும், பிரீமியம் வகுப்பில் 27 இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு நபருக்கு ரூ 7,500 கட்டணமும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

ஒரு நபர் 60 கிலோ வரை பார்சல் எடுத்து செல்லவும், 5 கிலோ வரை கைப்பையில் எடுத்து செல்லவும் அனுதிக்கப்பட்டுள்ளது. sailindsri.com என்ற இணையதளத்தில் பயணிகள் டிக்கெட் முன்பதிவு செய்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.


இந்த சோதனை ஓட்டம் முடிந்த பிறகு பயணிகள் டிக்கெட் முன் பதிவு செய்ய முடியும் என கூறப்பட்டுள்ளது. நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைமுகத்திற்கு மூன்று மணி நேரத்தில் செல்லும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# தருமபுரி மாணவிக்கு ஜம்முவில் நீட் தேர்வு மையம்: அன்புமணி ராமதாஸ் கண்டனம்

சென்னை, ஆக. 12

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இந்தியா முழுவதும் மருத்துவ மேற்படிப்புக்கான நீட் தேர்வு நாளை நடைபெறவுள்ள நிலையில், தருமபுரியைச்சேர்ந்த மாணவிக்கு ஜம்முகாஷ்மீரில் தேர்வு மையம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. அந்த மாணவி தருமபுரியிலிருந்து சென்னை வந்து விமானம் மூலம் காஷ்மீர் புறப்பட்டு சென்றிருப்பதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. இந்தியாவின் தென்கோடியில் உள்ள மாணவிக்கு வடகோடியில் தேர்வு மையம் ஒதுக்கியிருப்பது கண்டிக்கத்தக்கது.



பல முறை சுட்டிக்காட்டியும் தேர்வு மையங்களை ஒதுக்கீடு செய்வதில் நிகழ்ந்த தவறுகளையே சரி செய்ய முடியாத தேசிய தேர்வு வாரியம், முதுநிலை நீட் தேர்வை எவ்வாறு சரியாக நடத்தும்? என்ற வினா எழுகிறது.

இளநிலை நீட் தேர்வாக இருந்தாலும், முதுநிலை நீட் தேர்வாக இருந்தாலும் வினாத்தாள் கசிவு, தேர்வு மைய ஒதுக்கீட்டில் குழப்பம், தேர்வுகளில் முறைகேடு என பல புகார்கள் தொடர்ந்து எழுந்து கொண்டு தான் இருக்கின்றன. அதனால், நீட் தேர்வின் மீதான நம்பகத்தன்மை குறைந்து விட்ட நிலையில் அத்தேர்வை ரத்து செய்ய வேண்டும் இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# குன்னூர்: போக்சோ சட்டத்தில் முதியவர் கைது



குன்னூர் ஆக 12

குன்னூர் ஓட்டுப்பட்டறையில் வசித்துவரும் காய்கறி வியாபாரம் செய்து வரும் முருகேசன் (55)என்பவர் அந்தப்பகுதியில் 10 ஆம் வகுப்பு படித்துவரும் தனியார் பள்ளி மாணவியிடம் மூளை சலவை செய்து தகாத உறவு வைத்த காரணத்தால் போக்ஸோ சட்டத்தில் கைது செய்யப்பட்டார் மேலும் மாணவி குன்னூர் அரசு லாலி மருத்துவமனைக்கு பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

# மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம்

திருவாரூர், ஆக. 12

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி நூற்றாண்டு அரிமா சங்கமும், அரவிந்த் கண் மருத்துவமனை பாண்டிச்சேரி , திருவாரூர் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் இணைந்து நடத்திய மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம் திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி தாலுக்கா எடையூர் கிராமத்தில் உள்ள பி எஸ் கே மஹாலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.இந்த முகாமிற்கு நூற்றாண்டு அரிமா சங்கத் தலைவர் அரிமா. தங்கமணி தலைமை ,தாங்கினார். செயலாளர் அரிமா ராஜ் மோகன் அனைவரையும் வரவேற்றார்.சாசன தலைவர் டாக்டர் முகமது ஆரிப் மற்றும் மு வட்டார தலைவர் கண்ணன் , பி.எஸ்.கே மஹால் உரிமையாளர் சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.




மு. தலைவர் அரிமா கார்த்திகேயன், அரிமா.மாதவன், அரிமா. ரகுவரன், அரிமா. சிவகுருநாதன் ,அரிமா பார்த்திபன், அரிமா சக்கரவர்த்தி, ராய் டிரஸ்ட் நிறுவனர் முனைவர் துரை ராயப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர், மேலும் திருத்துறைப்பூண்டி சங்கீதா இரத்த பரிசோதனை நிலைய தன்னார்வலர்கள் பிரசன்னா காந்தி, மணிகண்டன், கிஷோர், துாபா மற்றும் பிரைட் பீப்பிள் நர்ஸிங் கல்லூரி மாணவிகளும் தன்னார்வலராக கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

# தமிழக மீனவர்களை விடுவிக்க பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும்: ஓ.பி.எஸ் கோரிக்கை



சென்னை, ஆக. 12

முன்னாள்முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்த கச்சத்தீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டபோது, அதற்கான உடன்படிக்கையில் இரு நாடுகளும் பரம்பரை பரம்பரையாகத் தங்கள் நாட்டிற்குச் சொந்தமான கடல் எல்லைகளில் எந்தெந்த உரிமைகளை அனுபவித்து வந்தனவோ, அந்தந்த உரிமைகளைத் தொடர்ந்து அனுபவிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், இதையெல்லாம் இலங்கை அரசு மதிப்பதாகத் தெரியவில்லை. தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டு வருவது தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இதன்மூலம் தமிழக மீனவர்களிடையே ஓர் அச்ச உணர்வினை தோற்றுவிக்க இலங்கை கடற்படை முயல்கிறது. தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை பறிக்க முயலும் இலங்கை அரசுக்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கை அரசுடனான தவறான உடன்படிக்கையின் மூலம் தமிழக மீனவர்களின் வரலாற்று உரிமையை பறிப்பது என்பது நியாயமற்ற செயல். இதற்கு ஒரு நிரந்தர மற்றும் நியாயமான தீர்வினை காணவேண்டிய பொறுப்பும், கடமையும் மத்திய அரசிற்கு உள்ளது.

பிரதமர் மோடி இலங்கை அரசிடம் உடனடியாக பேசி, இலங்கை அரசால் சிறை பிடிக்க ப்பட்டுள்ள அனைத்து தமிழக மீனவர்கள் மற்றும் அவர்களது படகுகளை விடுவிக்கவும், இந்த நீண்டநாள் பிரச்சனைக்கு நியாயமான, நிரந்தரத் தீர்வு காணவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# புதுக்கோட்டையில் ஆயுதங்களுடன் கைதான கும்பல்

புதுக்கோட்டை, ஆக. 12

புதுக்கோட்டை மாவட்டத்தில் குற்றசெயல்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக எஸ்.பி.வந்திதா பாண்டே மேற்பார்வையில் தனிப்படை போலீசார் அதிரடி சோதனை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் புதுக்கோட்டை பஸ் நிலையம் பகுதியில் உள்ள தங்கும் விடுதியில் போலீசார் சோதனை மேற்கொண்டனர்.

அப்போது, சந்தேகத்திற்கிடமான வகையில் 5 பேர் ஆயுதங்களுடன் தங்கியிருந்தனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில், கடலூர் மாவட்டம் சிதம்பரத்தை சேர்ந்த ஜெயபிரகாஷ்(26),

மணிகண்டபிரபு(29), நெல்லை மாவட்டம் ஆலங்குளத்தை சேர்ந்த சுரேஷ் பாண்டியன்(23), இசக்கி பாண்டியன்(24), ராஜவல்லிரம் மகாதேவன்(32) என்பது தெரிய வந்தது.

அவர்களிடம் இருந்து அரிவாள் உள்ளிட்ட ஆயுதங்கள், கார் ஆகியவற்றை பறிமுதல் செய்த போலீசார் 5 பேரும் கூலிப்படையை சேர்ந்தவர்களா என்று விசாரணை நடத்தி வருகின்றனர். அவர்கள் ஏதும் சதிச்செயலில் ஈடுபட்டுள்ளார்களா? என்றும் விசாரணை நடந்து வருகிறது.

# எளிமையாக வந்து பதவியேற்றுக் கொண்ட நெல்லை மேயர்

நெல்லை, ஆக. 12

நெல்லை மாநகராட்சியின் புதிய மேயராக ராமகிருஷ்ணன் பதவி ஏற்றுக் கொண்டார்.

நெல்லை மாநகராட்சியின் 6வது மேயராக இருந்த சரவணன் தனது பதவியை ராஜினாமா செய்த நிலையில் கடந்த 5ந்தேதி புதிய மேயருக்கான தேர்தல் நடத்தப்பட்டது. அதில் தி.மு.க. சார்பில் போட்டியிட்ட கவுன்சிலர் ராமகிருஷ்ணன் வெற்றி பெற்றார். இதையடுத்து அவர் வெற்றி சான்றிதழுடன் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் மற்றும் அமைச்சர்களை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.



காலை நெல்லை மாநகராட்சியின் 7வது மேயராக ராமகிருஷ்ணன் பதவி ஏற்பு நிகழ்ச்சி நெல்லை மாநகராட்சி மைய அலுவலகத்தில் உள்ள ராஜாஜி மன்ற கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இதற்காக மேயர் ராமகிருஷ்ணன் வழக்கமாக பயன்படுத்தும் தனது சைக்கிளில் டவுனில் உள்ள தனது இல்லத்தில் இருந்து மாநகராட்சி மைய அலுவலகத்திற்கு வந்தார். வழியில் நெல்லையப்பர் கோவில் மற்றும் விநாயகர் கோவிலில் சாமி தரிசனம் செய்துவிட்டு அலுவலகம் வந்தார்.

அதன் பின்னர் மாநகராட்சி அலுவலகத்தில் அவர் மேயராக பதவி ஏற்றுக்கொண்டார். அவருக்கு மாநகராட்சி கமிஷனர் சுகபுத்ரா பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

தொடர்ந்து மேயர் ராமகிருஷ்ணனின் தாயார் மரகதம்மாள் (வயது 95) அங்கி மற்றும் செங்கோலை தனது மகனுக்கு வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாநகராட்சி கமிஷனர் சுகபுத்ரா, ராபர்ட் புரூஸ் எம்.பி., நெல்லைகிழக்குமாவட்ட தி.மு.க செயலாளர் ஆவுடையப்பன், அப்துல் வஹாப் எம்.எல்.ஏ, துணை மேயர் கே.ஆர். ராஜூ மற்றும் தி.மு.க நிர்வாகிகள் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் மேயர் ராமகிருஷ்ணனுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

# ஒகேனக்கல்லில் நீர்வரத்து 20 ஆயிரம் கனஅடியாக அதிகரிப்பு



ஒகேனக்கல், ஆக. 12

கர்நாடகா, கேரள மாநிலங்களில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து உள்ளது. அதன் காரணமாக கர்நாடகா மாநிலத்தில் உள்ள கபினி, கிருஷ்ணராஜசாகர் ஆகிய இரு அணைகள் நிரம்பி அதில் இருந்து உபரிநீர் தொடர்ந்து காவிரி ஆற்றில் திறந்து விடப்படுகிறது.

இதன் காரணமாக தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு வரும் நீர்வரத்து 20 ஆயிரம் கனஅடி அளவில் இருந்து 2 லட்சம் கன அடி அளவு வரை அதிகரித்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இந்நிலையில் கர்நாடகா அணைகளில் இருந்து நீர்வரத்து படிப்படியாக குறைக்கப்பட்டது. இதனால் ஒகேனக்கல் காவிரி ஆற்றுக்கு வரும் நீரின் அளவு படிப்படியாக குறைந்தது நேற்று நிலவரப்படி வினாடிக்கு 8ஆயிரம் கன அடி வரை வந்து கொண்டிருந்தது.

இந்த நிலையில் கர்நாடகா அணிகளில் இருந்து நேற்று மீண்டும் நீர்வரத்து 17 ஆயிரம் கனஅடியாக தண்ணீர் காவிரி ஆற்றில் திறக்கப்பட்டது.

இதன் காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்தானது படிபடியாக உயர்ந்து இன்று காலை நிலவரப்படி வினாடிக்கு 20 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக மெயின் அருவி, சினி பால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து செல்கிறது.

காவிரி ஆற்றில் தண்ணீர் ஆர்ப்பரித்து சென்ற போதிலும் சின்னாறு பரிசல் துறையில் இருந்து மணல் திட்டு பகுதி வரை பரிசல் இயக்கப்படுகிறது.

தொடர்ந்து 20 ஆயிரம் கனஅடி வரை தண்ணீர் ஒகேனக்கல்லில் காவிரி ஆற்றில் ஆர்ப்பரித்து செல்வதால் சுற்றுலா பயணிகள் அருவிகளில், காவிரி ஆற்றில் குளிக்க 26வது நாளாக தடை நீடிக்கப்பட்டுள்ளது. இதனால் சுற்றுலா பயணிகள் அருவிகளில் குளிக்க முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

மேலும் நீர்வரத்து காவிரி ஆற்றில் அதிகரிப்பதும் குறைவதும் கர்நாடகா அணைகளில் இருந்து வெளியேற்றப்படும் உபரி நீரின் அளவைப் பொறுத்து உள்ளது என மத்திய நீர்வளத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காவிரி ஆற்றில் வரும் நீர்வரத்தை தமிழக கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# குற்றாலத்தில் வரும் 16ந்தேதி சாரல் விழா தொடக்கம் மாவட்ட கலெக்டர் தகவல்



தென்காசி, ஆக. 12

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் வரும் 16 ந்தேதி தொடங்கி 19ந்தேதி வரை சாரல் விழா நடைபெறும் என தென்காசி கலெக்டர் கமல் கிஷோர் தெரிவித்துள்ளார்.

நான்கு நாட்கள் நடைபெறும் இந்த சாரல் விழாவில் பல்வேறு கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

சாரல் விழாவில் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வரும் 16ந்தேதி முதல் 18ந்தேதி வரை குற்றாலம் ஐந்தருவி சுற்றுச்சூழல் பூங்காவில் மலர்க்கண்காட்சி நடைபெறும் என மாவட்ட கலெக்டர் தெரிவித்துள்ளார்.

# வங்காளதேசத்தில் இருந்து சிறுமியை கடத்தி வந்த இளைஞர் ஓசூரில் கைது




கிருஷ்ணகிரி, ஆக. 12

வங்காளதேச நாட்டைச் சேர்ந்த சாஹினுார் மொல்லா என்ற நபர், கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் சர்ஜாத் பாஷா என்பவரது வீட்டில் கடந்த 2 மாதங்களாக வாடகைக்கு தங்கியுள்ளார். இவருடன் வங்காளதேசத்தைச் சேர்ந்த 15 வயது சிறுமி தங்கியிருந்த நிலையில், தன்னை அந்த இளைஞர் கடத்தி வந்துள்ளதாக பெங்களூருவில் உள்ள தன்னார்வ அமைப்பிடம் அந்த சிறுமி புகார் கூறியுள்ளார்.

இது குறித்து ஆவலப்பள்ளி வி.ஏ.ஓ. நேத்ரா விசாரணை நடத்தினார். இதில் அந்த இளைஞர், சிறுமியை பாஸ்போர்ட் மற்றும் விசா இல்லாமல் மேற்கு வங்காள மாநில எல்லை வழியாக ஓசூருக்கு கடத்தி வந்தது தெரியவந்தது. இதையடுத்து இளைஞரை கைது செய்து புழல் சிறையில் அடைத்த போலீசார், சிறுமியை ஓசூரில் உள்ள ஆதரவற்றோர் இல்லத்தில் தங்கவைத்துள்ளனர்

# தாம்பரம் ரெயில் நிலையத்தில் எக்ஸ்பிரஸ் ரெயில்கள் 3 நாட்கள் நிற்காது: தெற்கு ரெயில்வே அறிவிப்பு




சென்னை, ஆக. 12

சென்னையின் மூன்றாம் ரெயில் முனையும் அமைக்கும் பணிகளுக்காக தாம்பரத்தில் கூடுதலாக நடைமேடை 9 மற்றும் 10 ஆகிய புதிய 2 நடைமேடைகள் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இந்த பணிகள் காரணமாக ரெயில் சேவையில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது. சென்னை எழும்பூரில் இருந்து தென்மாவட்டங்களுக்கு இயக்கப்படும் ரெயில்கள் பகுதி நேரமாகவும், சில ரெயில்கள் முழுவதுமாகவும் ரத்து செய்யப்பட்டுள்ளது. மின்சார ரெயில்களின் சேவையும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இந்த சூழலில் பராமரிப்பு பணிகள் காரணமாக ஆகஸ்ட் 15, 16, 17 ஆகிய தேதிகளில் தாம்பரம் ரயில் நிலையத்தில் எந்த எக்ஸ்பிரஸ் ரெயில்களும் நிற்காது என்று தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது. இது குறித்து தெற்கு ரெயில்வே வெளியிட்ட அறிவிப்பில், "தாம்பரத்தில் நடந்து வரும் யார்டு புனரமைப்புப் பணிகள் காரணமாக, அனைத்து எக்ஸ்பிரஸ் ரெயில்களும் 15.08.2024 (வியாழன்), 16.08.2024 (வெள்ளிக்கிழமை), 17.08.2024 (சனிக்கிழமை) ஆகிய 3 நாட்களுக்கு தாம்பரத்தில் நிற்காது.

இந்த நாட்களில் சென்னை எழும்பூர் வழியாகச் செல்லும் அனைத்து எக்ஸ்பிரஸ் ரெயில்களும் தாம்பரத்தில் நிற்காது என்றாலும், பயணிகளின் வசதிக்காக மாம்பலத்தில் கூடுதலாக நின்று செல்லும். இதேபோல் சென்னை எழும்பூரில் இருந்து புறப்படும் மற்றும் சென்னை எழும்பூர் வழியாக செல்லும் அனைத்து எக்ஸ்பிரஸ் ரெயில்களும் ஆகஸ்ட் 15, 16, 17 ஆகிய தேதிகளில் 3 நாட்களுக்கு தாம்பரத்தில் நிற்காது என்றாலும் பயணிகளின் வசதிக்காக செங்கல்பட்டில் கூடுதலாக நின்று செல்லும்."

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

# போக்குவரத்து ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகள் எப்போது நிறைவேறும்? அண்ணாமலை சரமாரி கேள்வி



சென்னை, ஆக. 12

பாஜக மாநில தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு, கடந்த எட்டரை வருடங்களாக, அதாவது 102 மாதங்களாக, அகவிலைப்படி உயர்வு வழங்காமல் தமிழக அரசு நிறுத்தி வைத்திருக்கிறது. மேலும், கடந்த 18 மாதங்களாக, ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு, ஓய்வுக் காலப் பணப் பலனையும் வழங்காமல் இருப்பதாகத் தெரிகிறது.

கடந்த 8 ஆண்டுகளில், தமிழக அரசுப் போக்குவரத்துக்கழகங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்கள், சுமார் 93,000 தொழிலாளர்கள் உள்ளனர். இவர்களுக்கான அகவிலைப்படி உயர்வு வழங்கப்படாமலும், ஓய்வூதியத்தை முறைப்படுத்தாமலும், வயது முதிர்ந்த காலத்தில், மிகக்குறைந்த அளவில் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

பல முறை தமிழக அரசிடம் கோரிக்கை விடுத்தும், கடந்த 2022ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் உயர்நீதிமன்றமே, அகவிலைப்படி உயர்வு வழங்கக் கூறி தீர்ப்பளித்த பின்னரும், திமுக அரசு, இதுவரை ஓய்வு பெற்றோருக்கான அகவிலைப்படி உயர்வை வழங்காமல் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது.

இது தொடர்பாக, ஓய்வூதியதாரர்கள் பலமுறை அரசின் கவன ஈர்ப்புப் போராட்டங்கள் நடத்தியுள்ளனர். மேலும், ஒவ்வொரு ஆண்டும். வேறு வழியின்றி, பொங்கல் பண்டிகை நேரத்தில், போக்குவரத்துத் துறை ஊழியர்கள் வேலை நிறுத்தம் அறிவிப்பதும், அந்த நேரத்தில் பொய்யான வாக்குறுதிகள் கொடுத்து அவர்களைச் சமாதானப்படுத்தி, பின்னர் அவர்கள் கோரிக்கைகளைக் கிடப்பில் போடுவதும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இதனால், பொதுமக்களும் அவதிக்குள்ளாகின்றார்கள். எட்டு ஆண்டுகளுக்கும்மேலாக, ஓய்வு பெற்றவர்களை அலைக்கழிப்பதை நிச்சயம் ஏற்றுக் கொள்ள முடியாது.

திமுக அரசு உண்மையில் எதற்கு முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டிருக்கிறது? அரசுத் துறைகளில் பல ஆண்டுகள் சேவை செய்து ஓய்வு பெற்றவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு நிதி ஒதுக்காமல், கார் பந்தயம் போன்ற அனாவசியச் செலவுகளுக்குப் பெருமளவில் நிதி ஒதுக்கிக் கொண்டிருக்கிறது. பொதுமக்களின் வரிப்பணம், பொதுமக்களுக்கான சேவைகளுக்கே தவிர, திமுகவினர் கேளிக்கைகளுக்கு அல்ல.

உடனடியாக, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் இருந்து ஓய்வு பெற்றவர்களின் நியாயமான கோரிக்கைகளான, ஓய்வூதியத்தை முறைப்படுத்தி, கடந்த 102 மாதங்களாக வழங்கப்படாமல் இருக்கும் அகவிலைப்படி உயர்வு, ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு மருத்துவக் காப்பீடு, கடந்த 18 மாதங்களாக வழங்கப்படாமல் இருக்கும் ஓய்வுக்கால பணப்பலன் ஆகியவற்றை உடனே நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். பொங்கல் பண்டிகை வரை இழுத்தடித்து, மீண்டும் வழக்கம்போல போராட்டத்தில் ஈடுபடும் சூழலுக்குப் போக்குவரத்துத் துறை ஊழியர்களைத் தள்ள வேண்டாம் என்றும் எச்சரித்துக் கொள்கிறேன்." இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை தேவை: இந்தியக் கம்யூனிஸ்ட்




சென்னை, ஆக. 12

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

தமிழ்நாட்டில் இருந்து மீன்பிடிக்க சென்ற இந்திய மீனவர்கள் 32 பேரை மறுபடியும் இலங்கைக் கடற்படை கைது செய்திருக்கிறது. நான்கு நாட்டுப் படகுகளையும் பறிமுதல் செய்திருக்கிறது.

முன்பு மீன்பிடி விசைப் படகுகளை வழி மறித்து பறிமுதல் செய்து, மீனவர்களை கைது செய்து வந்த இலங்கை கப்பற்படை, இப்போது நாட்டுப்புற படகுகளையும் பறிமுதல் செய்ய தொடங்கியிருக்கிறது. ஏற்கனவே பறிமுதல் செய்யப்பட்ட பல லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள சுமார் 200 விசைப்படகுகள் மீட்கப்படாமல், இலங்கை கடற்கரைகளில் சேதம் அடைந்து அழிந்து கொண்டிருக்கின்றன. 50க்கும் மேற்பட்ட மீனவர்கள் இலங்கை சிறையில் வாடுகின்றனர்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடைப்பட்ட கடல் பகுதியில், இந்திய கப்பற்படை, கடலோர காவல் படை ஆகியவையும் இருக்கின்றன. அவை ஏன் இந்திய மீனவர்களை பாதுகாக்க தவறுகின்றன என்பது வெளிப்படுத்தப்படவில்லை. அண்மையில் 2 மீனவர்கள் இலங்கை கடற்படையால் கொல்லப்பட்டதை எதிர்த்து கடந்த ஒரு மாத காலமாக ராமேஸ்வரத்தில் மீனவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இது குறித்த பிரச்சனையை நாடாளுமன்றத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் வை செல்வராஜ் உட்பட தமிழ்நாட்டை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கேள்வி எழுப்பி இருக்கிறார்கள். இந்த பிரச்சினையில் மத்திய அரசு என்ன கருதுகிறது, என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை பற்றி வாய் திறந்து பேசவும் மறுக்கிறது. இந்தியாவின் மேற்கு கடற்கரைப் பகுதியில் அண்டை நாடுகள் இருந்தும் இது போன்ற நிகழ்வுகள் நடைபெறுவதில்லை. தமிழ்நாட்டு மீனவர்களை மட்டும் மத்திய அரசு காக்க தவறுகிறது.

மெட்ரோ உள்ளிட்ட தமிழ்நாட்டின் வளர்ச்சி திட்டங்களுக்கு, மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்வதில்லை. பேரிடர் காலங்களிலும் உதவிக்கரம் நீட்டுவதில்லை. இந்துத்துவ அரசியலுக்கு உடன்பட மறுப்பதனால், தமிழ்நாட்டு மக்கள் வஞ்சிக்கப்படுவதன் ஒரு பகுதியாகவே மீனவர் பிரச்சினையையும் பார்க்க வேண்டியுள்ளது. இலங்கை கடற்படை கைது செய்து வைத்துள்ள இந்திய

மீனவர்களை உடனடியாக விடுதலை செய்யவும், பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை மீட்கவும், இந்த பிரச்சினையில் ஒரு நிரந்தர தீர்வு காணவும் தக்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேசிய கொடிகள் தயாரிக்கும் பணிகள் தீவிரம்



சிவகாசி ஆக. 12

விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் உள்ள அச்சகத்தில், சுதந்திர தின கொண்டாட்டத்திற்கு தேவையான தேசிய கொடிகள் அச்சடிக்கும் பணிகளும், தயாரான கொடிகள் வெளியூர் மற்றும் வெளி மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கும் பணிகளும் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. சிவகாசி அச்சகத்தில் துணியிலான தேசிய கொடிகள், வார்னீஸ் பேப்பர், பளபளக்கும் ஆர்ட் பேப்பர், அட்டை உள்ளிட்டவைகளில் தேசிய கொடிகள் தயாராகி வருகின்றன.

சட்டையில் குத்தும் வகையில் பேப்பர் தேசிய கொடிகளும், இருசக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்களின் முகப்புகளில் பொருத்தும் வகையிலான அட்டையால் தயாரிக்கப்படும் தேசிய கொடிகள் அதிகளவில் தயாராகி வருகின்றன. மேலும் இந்தியா வரை படத்துடன் கூடிய தேசிய கொடிகள், தேசத்தந்தை மகாத்மா காந்தி உருவத்துடன் கூடிய தேசிய கொடிகள்,

சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால்நேரு உருவத்துடன் கூடிய தேசிய கொடிகள் அழகிய வடிவங்களுடன், கண்ணை கவரும் டைகட்டிங் வடிவத்துடன் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

மேலும் தொப்பி வடிவில் தலையில் மாட்டிக் கொள்ளும் வகையில் தேசிய கொடிகள், கைகளில் மாட்டிக் கொள்ளும் வகையிலான தேசிய கொடிகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.

தேசிய கொடிகள் தயாரிப்பில் முன்னணியில் இருக்கும் அச்சக உரிமையாளர் காசிராஜன் கூறியதாவது:

சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாக தேசிய கொடிகள் தயாரிக்கும் பணிகளை செய்து வருகிறோம். தமிழகத்தில் உள்ள பள்ளிகள், கல்லூரிகளில் சுதந்திர தின கொண்டாட்டத்திற்காக தேசிய கொடிகளை மொத்தமாக ஆர்டர்கள் கொடுத்து வாங்கினார்கள்.

பொதுமக்கள் பயன்படுத்துவதற்காக ஸ்டேசனரி கடைகளில் பல வடிவங்களிலான தேசிய கொடிகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது.

படிப்படியாக தமிழகம் முழுவதும் சுதந்திர தினத்தன்று தேசிய

கொடியை சட்டைகளில் குத்திக் கொள்ளும் உற்சாகம் தொடங்கியது. இது தமிழகத்தை தாண்டி புதுச்சேரி, கர்நாடகா,

ஆந்திரா மாநிலங்களிலும் பரவியது. அங்குள்ள பள்ளி, கல்லூரிகள் மற்றும் கடைகளில் விற்பனை செய்வதற்கான தேசிய கொடிகள் ஆர்டர்கள் அதிகளவில் கிடைத்தது.

பேப்பர் கொடி மற்றும் அட்டையால் தயாரிக்கப்படும் கொடிகளின் விலை கடந்த ஆண்டை விட சற்று கூடுதலாக இருக்கும். ஆனால் இந்த சின்ன விலையேற்றம் பெரிய பாதிப்பை ஏற்படுத்தவில்லை. கடந்த 2 மாதங்களாக தேசிய கொடிகள் தயாரிக்கும் பணிகள் நடந்து வருகிறது. தற்போது எடுக்கப்பட்ட ஆர்டர்களுக்கு கொடிகள் அனுப்பி வைக்கும் பணிகள் நடந்து வருகின்றன என்று கூறினார்.

# சேலத்தில் செவிலியர் எனக் கூறி குழந்தையை கடத்திய பெண்



சேலம், ஆக. 12

சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பள்ளிபாளையம் பகுதியை சேர்ந்த வெண்ணிலா தங்கதுரை தம்பதிக்கு கடந்த 5ம் தேதி ஆண் குழந்தை பிறந்தது. பிறந்து 5 நாட்களே ஆன பச்சிளம் குழந்தையை, செவிலியர் எனக் கூறி பெண் ஒருவர் கடத்திச் சென்றுள்ளார்.

குழந்தையின் கண்கள் மஞ்சளாக உள்ளது எனக் கூறி தாயிடம் இருந்து குழந்தையை அந்தப் பெண் தூக்கிச் சென்றுள்ளார். குழந்தையுடன் அந்த பெண் மாயமான நிலையில், நிலைமையை உணர்ந்த குழந்தையின் பெற்றோர், போலீசில் புகார் அளித்தனர்.

இந்த புகாரின் அடிப்படையில் போலீசார் விசாரணையை தீவிரப்படுத்தினர். குழந்தையை, பெண் ஒருவர் தூக்கிச்செல்லும் காட்சிகள் அங்குள்ள சிசிடிவி கேமராவில் பதிவாகியுள்ளது. இந்த காட்சிகளை கொண்டு போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

# மெத்தப்பட்டமைன் போதைப்பொருளை புழக்கத்தில் விட்ட 2 வாலிபர்கள் கைது



மேலசொக்கநாதபுரம், ஆக. 12

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள ஏ. புதுப்பட்டி புறவழிச்சாலையில் கடந்த ஜூன் மாதம் 29ம் தேதி பெரியகுளம் வடகரை போலீஸ் இன்ஸ்பெக்டர் பாஸ்டின் தினகரன் தலைமையிலான போலீசார் நள்ளிரவில் ரோந்து பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

அப்போது கேரள பதிவெண் கொண்ட ஒரு காரை தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர். அதில் 2 கிலோ கஞ்சா மற்றும் மெத்தப்பட்டமைன் போதைப்பொருள் 30 பாக்கெட்டுகளில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தேனி மாவட்ட எஸ்.பி. சிவப்பிரசாத் உத்தரவின் பேரில் தனிப்படை அமைக்கப்பட்டு இந்த போதைப்பொருள் விற்பனை மற்றும் சப்ளையில் யார்? யார்? ஈடுபட்டுள்ளனர் என விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

அப்போது தனிப்படை போலீசார் கோவை, ஈரோடு, கம்பம், கொடைக்கானல் ஆகிய பகுதிகளை சேர்ந்த 5 பேரை கைது செய்து அவர்களிடம் இருந்த லேப்டாப், செல்போன், கார் மற்றும் போதைப்பொருட்களையும் பறிமுதல் செய்தனர். இவர்களுக்கு மூளையாக செயல்பட்டவர் கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் பதுங்கி இருப்பது தனிப்படை போலீசார் விசாரணையில் தெரியவந்தது. இவர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் போதைப்பொருள் விற்பனைக்கு ஆட்களை நியமித்து அவர்கள் கொடுக்கும் முன் பணத்தை வைத்து கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்களை குறி வைத்து விலை உயர்ந்த மெத்தபட்டமைன் மற்றும் கஞ்சா சிகரெட் ஆகியவற்றை விற்பனை செய்து வந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட செல்போன்களில் இருந்து முக்கிய தடயங்களை கண்டுபிடித்த போலீசார் திருவனந்தபுரத்தில் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். இந்நிலையில் மோகன் நோர்பட் (வயது28), ஆதர்ஸ் (25) ஆகிய 2 பேரை திருவனந்தபுரத்தில் தனிப்படை போலீசார் ஒரு மாதத்திற்கு பின்பு கைது செய்து பெரியகுளத்திற்கு அழைத்து வந்தனர். அவர்கள் கஞ்சா, மெத்தப்பட்டமைன் விற்பனைக்காக பயன்படுத்திய காரையும் போலீசார் பறிமுதல் செய்தனர். இவர்கள் போதைப்பொருள் விற்பனையில் கிடைத்த பணத்தின் மூலம் அங்கு சொகுசு வாழ்க்கை வாழ்ந்ததும் கண்டறியப்பட்டது. இதனையடுத்து அவர்களை பெரியகுளம் நீதிமன்றத்தில் போலீசார் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# தமிழக மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும்: ஜி.கே.வாசன் வலியுறுத்தல்

சென்னை, ஆக. 12

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் பகுதியைச் சேர்ந்த 33 மீனவர்கள் 4 நாட்டு படகுகளில் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது அப்பகுதிக்கு வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களை கைது செய்து, அவர்களின் நாட்டு படகுகளையும் பறிமுதல் செய்தனர். இதனால் ராமநாதபுரம் மாவட்ட மீனவக் குடும்பத்தினர் கவலை அடைந்துள்ளனர்.தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் கைது நடவடிக்கையும், படகுகளை பறிமுதல் செய்வதும் தொடர்கிறது. இதனால் தமிழக மீனவர்களின் மீன்பிடித் தொழில் சரிவர நடைபெறாமல், வருமானம் ஈட்ட முடியாமல் மிகுந்த சிரமத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்நிலை தொடரக்கூடாது.எனவே மத்திய அரசு தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் கைது நடவடிக்கைக்கும், படகுகளை பறிமுதல் செய்வதற்கும் முற்றுப்புள்ளி வைப்பதற்கு உடனடிப் பேச்சுவார்த்தையை மேற்கொள்ள வேண்டும். மேலும் மத்திய அரசு தற்போது கைது செய்யப்பட்டுள்ள 33 தமிழக மீனவர்களையும், ஏற்கனவே இலங்கை வசம் உள்ள மீனவர்களையும் மற்றும் மீனவர்களின் படகுகளையும் மீட்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# படப்பிடிப்பில் விபத்து: நடிகர் சூர்யாவுக்கு தலையில் காயம்



சூர்யாவின் 44 வது திரைப்படத்தை பிரபல இயக்குனர் கார்த்திக் சுப்புராஜ் இயக்கி வருகிறார். இந்த படத்தை சூர்யாவின் 2டி மற்றும் காரத்திக் சுப்புரா ஜின் ஸ்டோன் பென்ச் நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கின்றன. படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார். படத்தில் சூர்யா இரட்டை வேடங்களில் நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இப்படத்தில் கதாநாயகியாக பூஜா ஹெக்டே நடிக்கிறார். ஜோஜூ ஜார்ஜ், கருணாகரன், ஜெயராம் ஆகியோர் இப்படத்தில் முக்கிய பாத்திரங்களில் நடிக்கின்றனர். படத்தின் படப்பிடிப்பு அந்தமானில் கடந்த ஜூன் மாதம் துவங்கி முதற்கட்ட படப்பிடிப்பு முடிவடைந்தது. சமீபத்தில் சூர்யாவின் பிறந்தநாளை முன்னிட்டு படத்தின் சிறப்பு வீடியோ வெளியாகி ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. இந்த நிலையில், அடுத்தக்கட்ட படப்பிடிப்பு ஊட்டியில் நடைப்பெற்று வருகிறது. இதில் சண்டைக்காட்சி படப்பிடிப்பின் போது நடிகர் சூர்யாவுக்கு தலையில் காயம் ஏற்பட்டுள்ளது.. உடனடியாக படப்பிடிப்பு நிறுத்தப்பட்டு, முதலுதவி சிகிச்சைக்கு பிறகு சூர்யா சென்னை திரும்பினார் . சில நாட்களுக்கு ஓய்வெடுக்க மருத்துவர்கள் அறிவுறுத்தி உள்ளனர். தற்போது சூர்யா நலமுடன் இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

# 'விஜய் சேதுபதியை தாக்கினால் பரிசு...' என பதிவிட்ட அர்ஜுன் சம்பத்திற்கு அபராதம் விதித்த நீதிமன்றம்



நடிகர் விஜய் சேதுபதியை தாக்கினால் பரிசு என்று சமூக வலைதளத்தில் பதிவிட்ட, இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பத்துக்கு அபராதம் விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

நடிகர் விஜய் சேதுபதி தமிழ் சினிமாவில் மட்டுமல்லாமல் மலையாளம், இந்தி உள்ளிட்ட மொழி படங்களிலும் தனது சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி தனக்கென ஏராளமான ரசிகர்களை பெற்றுள்ளார். இவரது நடிப்பில் கடைசியாக வெளியானமகாராஜாதிரைப்படம்இன்றுவரையிலும் பேசப்படுகிறது.

நடிகர் விஜய் சேதுபதி பசும்பொன் முத்துராமலிங்க தேவரை பற்றி தவறாக பேசியதாக, இந்து மக்கள் கட்சி மாநில தலைவர் அர்ஜுன் சம்பத், தனது எக்ஸ் பக்கத்தில், "தேவர் ஐயாவை இழிவு படுத்தியதற்காக நடிகர் விஜய் சேதுபதியை உதைப்பவருக்கு ரொக்கப் பரிசு ரூபாய் 1001 வழங்கப்படும்" என்று 2021ம் ஆண்டு பதிவிட்டிருந்தார். அர்ஜுன் சம்பத்தின் இந்த பதிவு, விஜய் சேதுபதி ரசிகர்கள் மற்றும் சமூக வலைதளங்களில் சர்ச்சையை ஏற்படுத்தி கொந்தளிப்பையும் கோபத்தையும் ஏற்படுத்தியது. இதன் காரணமாக கோவை குற்றவியல் நீதிமன்றத்தில் அர்ஜுன் சம்பத் மீது வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த நிலையில் அர்ஜுன் சம்பத்திற்கு ரூ. 4000 அபராதம் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# நண்பன் ஒருவன் வந்த பிறகு படக்குழுவினரை பாராட்டிய நடிகர் சிவகார்த்திகேயன்

ஹிப்ஹாப் ஆதி இயக்கிய 'மீசைய முறுக்கு' படத்தில் தனது நடிப்பு திறமையால் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தவர் ஆனந்த். இவர் தற்போது 'நண்பன் ஒருவன் வந்த பிறகு' என்ற படத்தை இயக்கியுள்ளார். இயக்குனர் வெங்கட் பிரபு தயாரிப்பாளராகவும் உருவெடுத்த நிலையில் 'நண்பன் ஒருவன் வந்த பிறகு' என்ற திரைப்படத்தை தயாரித்துள்ளார்.

ஆனந்த் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். மேலும் பவானி ஸ்ரீ, மோனிகா, இர்பான் மற்றும் ஆர்.ஜே.விஜய் ஆகியோர்நடித்துள்ளனர். இந்தபடத்திற்கானபாடல்களைதனுஷ் மற்றும்ஜி.வி பிரகாஷ்பாடியுள்ளனர். இந்தபடமானது, இளைய தலைமுறையினரின் நட்பை பற்றிய கருத்தை மையமாக கொண்ட படமாக அமைந்துள்ளது. இப்படத்திற்கு சுனில் காஷிப் இசையமைத்துள்ளார். இத்திரைப்படம் கடந்த ஆகஸ்ட் 2ம் தேதி வெளியாகி மக்களிடையே கலவையான விமர்சனத்தை பெற்று வருகிறது. ஏற்கனவே மிர்ச்சி சிவா, ஜெய் ஆகியோர் படம் தொடர்பாக பாசிட்டிவ்வான விமர்சன வீடியோவை வெளியிட்டிருந்தனர். அவர்களைத் தொடர்ந்து நடிகர் சிவகார்த்திகேயனும் தற்போது 'நண்பன் ஒருவன் வந்த பிறகு' திரைப்படத்தை பார்த்து தனது விமர்சனத்தை வெளியிட்டுள்ளார். "நண்பன் ஒருவன் வந்த பிறகு படத்தை எழுதி, இயக்கி நடித்துள்ள ஆனந்த் என்னுடன் ரெமோ திரைப்படத்தில் ஒரு சிறிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். அந்த இடத்திலிருந்து தற்போது ஒரு படத்தை இந்த அளவுக்கு இயக்கியிருக்கிறார் என்பதை பார்க்கும்போது எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. அற்புதமான நண்பர்கள் சேர்ந்தால் வெற்றிகள் குவியும் என்பது நான் எப்போதும் சொல்வது. அதுபோல நண்பர்கள் எல்லாரும் இணைந்து வாழ்க்கையில் என்ன சாதித்தார்கள் என்பதை சொல்வது தான் இந்த படம். படத்தில்பலகாட்சிகள்நம்வாழ்க்கையில்நடப்பதைதொடர்புபடுத்தும். படக்குழுவினருக்குஎன்னுடையவாழ்த்துக்கள்" என்று பாராட்டியுள்ளார் சிவகார்த்திகேயன்

# விவசாய பணியில் நடிகர் சசிகுமார்



இயக்குநரும் நடிகருமான சசிகுமார் தனது வயலில் விவசாயம் செய்யும் படங்களைப் பகிர்ந்துள்ளார்.

சேது படத்தில் இயக்குநர் பாலாவுடன் உதவி இயக்குநராகவும், அதனைத் தொடர்ந்து மௌனம் பேசியதே, ராம் ஆகிய படங்களில் இயக்குநர் அமீருடன் உதவி இயக்குநராகவும் பணியாற்றியவர் சசிகுமார். திரைத்துறையில் இயக்குநராக அறிமுகமான சசிகுமார், சுப்ரமணியபுரம் படத்தின் மாபெரும் வெற்றிக்குப் பிறகு திரைப்படங்களை இயக்கி வந்தார். அதேவேளை, நடிப்பிலும் ஆர்வம் கொண்ட அவர், நாயகனாக நடித்தும் தனக்கென ரசிகர்களை பெற்றார்.

சசிகுமார், சூரி நடிப்பில் வெளியான கருடன் திரைப்படம் கடந்த மே மாதம் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று ரூ. 50 கோடி வரை வசூலித்தது. இவர் நடித்துள்ள "பீரீடம் ஆகஸ்ட் 14" திரைப்படம் வருகிற செப்டம்பர் மாதம் வெளியாக உள்ளதாகக் கூறப்படுகிறது. மேலும், இயக்குநர் ராஜுமுருகன் இயக்கத்திலும் ஒரு படத்தில் நடிக்க உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

சசிக்குமார் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தனது வயலில் நடவு நடும் படங்களைப் பகிர்ந்துள்ளார். பெரும்பாலும் கிராமங்கள் மற்றும் மண் சார்ந்த கதைகளில் நடித்துள்ள சசிகுமார், விவசாயம் தொடர்பான விஷயங்களில் பெரிதும் ஈடுபாடு கொண்டவராகவே தன்னை வெளிப்படுத்தி வந்துள்ளார். தற்போது தனது வயலில் நடவு நடும் பெண்களுடன் நின்று கொண்டிருக்கும் புகைப்படங்களைப் பகிர்ந்து 'எங்க வயலில் நடவு' என பதிவிட்டுள்ளார்.

# "மாயன்" படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு




சிறப்பான கதை மற்றும் தொழில்நுட்ப குழுவின் நேர்த்தியான படைப்பு அதை வெற்றி படமாக மாற்றும். இந்த வரிசையில் "மாயன்" திரைப்படம் நிச்சயம் இணையும் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

நேரடியாக ஆங்கிலத்தில் உருவாக்கப்பட்ட முதல் இந்திய திரைப்படம் மாயன். இந்த படம் ஆங்கிலம் மட்டுமின்றிதமிழ் மொழியிலும் வெளியிடப்படஉள்ளது. பேண்டஸி, திரில்லர் மற்றும் வரலாறு என மூன்றுவித ஜானரில் நகரும் வகையில், இந்த படத்தின் கதை எழுதப்பட்டு இருக்கிறது. இவை அனைத்தும் ஒரு மனிதனின் வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களாக ஒருங்கிணைக்கப்பட்டு உள்ளன.

இந்திய திரையுலகில் உருவாக்கப்பட்டதிலேயே அதிக கிராபிக்ஸ் காட்சிகள் நிறைந்த திரைப்படமாக "மாயன்" உள்ளது. இந்த படத்தின் 50 சதவீதத்திற்கும் அதிகமான காட்சிகள் கிராபிக்ஸ் முறையில் உருவாக்கப்பட்டு உள்ளன. இதற்காக டிஜிட்டல் புரொடக்சன் செய்யப்பட்டது. 2 பதிப்புகளாக மாயன் படத்தை உருவாக்கி இருக்கிறார்கள். ஒன்று, மாயன் காலண்டர் மற்றும் உலகின் முடிவு பற்றியும், இரண்டு, உலகம் அழிந்ததா இல்லையா? மாயனுக்கும் கடவுளுக்கும் என்ன சம்மந்தம் என்பது பற்றி உருவாக்கி இருக்கிறார்கள். முதல் பதிப்பை விட இரண்டாம் பதிப்பில் கூடுதல் கிராபிக்ஸ் காட்சிகள் உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இயக்குனர் ராஜேஷ் கன்னா எழுதி, இயக்கி இருக்கும் "மாயன்" படத்தை பாக்ஸ் அண்ட் க்ரோ ஸ்டூடியோஸ் நிறுவனம் தயாரித்து இருக்கிறது. ஜி.வி.கே.எம். எலிபன்ட் பிக்சர்ஸ் டாட்டோ கணேஷ் மோகன சுந்தரம் இந்த படத்தை இணைந்து தயாரித்துள்ளார். இந்த படத்தில் வினோத் மோகன் மற்றும் பிந்து மாதவி முன்னணி கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இவர்களுடன் ஆங்கில பதிப்பில் பிரியங்கா மோகன் சிறப்பு தோற்றத்தில் நடித்துள்ளார்.



இவர்கள் தவிர பியா பாஜ்பாய், ஜான் விஜய், ஆடுகளம் நரேன், சாய் தீனா, கஞ்சா கருப்பு, ராஜ சிம்மன், ஸ்ரீ ரஞ்சனி, ரஞ்சனா நாச்சியார், கே.கே. மேனன்மற்றும்பலர்நடித்துள்ளனர். இந்தபடத்திற்கு எம்.எஸ். ஜோன்ஸ் ரூபெர்ட் இசையமைத்துள்ளார். ஒளிப்பதிவு பணிகளை கே. அருண் பிரசாத், படத்தொகுப்பு பணிகளை எம்.ஆர். ராஜேஷ் மேற்கொண்டுள்ளனர்.

இந்தபடத்தின்இறுதிக்கட்டபணிகள்மும்முரமாக நடைபெற்று வருகிறது. "மாயன்" படம் வரும் செப்டம்பர் மாதம் 19ம் தேதி வெளியாக உள்ளது.

# ஒருநாள் கிரிக்கெட்; இந்திய அணியில் இடம் கிடைக்காதது குறித்த கேள்விக்கு சஞ்சு சாம்சன் அளித்த பதில்




இந்தியகிரிக்கெட்அணிகடந்தசிலதினங்களுக்கு முன் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு டி20 மற்றும் ஒருநாள் தொடர்களில் ஆடியது. இந்த தொடருக்கான இந்திய டி20 அணியில் சஞ்சு சாம்சன் இடம் பிடித்திருந்தார். ஆனால் ஒருநாள் தொடருக்கான அணியில் சஞ்சு சாம்சன் இடம் பெறவில்லை.

குறிப்பாக கடந்த 2023 டிசம்பர் மாதம் தென் ஆப்பிரிக்க மண்ணில் நடைபெற்ற ஒருநாள் தொடர் 2 போட்டிகளின் முடிவில் சமனில் இருந்தது. அப்போது 3வது போட்டியில் மிடில் ஆர்டரில் அபாரமாக விளையாடிய சாம்சன் சதமடித்து இந்தியாவை வெற்றி பெற வைத்து ஆட்டநாயகன் விருதை வென்றார்.

ஆனால்அதற்குஅடுத்ததாகஇந்தியாவிளையாடியஒருநாள்தொடரில்சாம்சனுக்குவாய்ப்புகிடைக்கவில்லை. புதிய பயிற்சியாளராக பொறுப்பேற்ற கவுதம் கம்பீர் கூட அவருக்கு வாய்ப்பு வழங்காதது ரசிகர்களுக்கு ஏமாற்றமாக அமைந்ததுள்ளது.

இந்நிலையில் சமீபத்திய பேட்டி ஒன்றில் இது குறித்து செய்தியாளர் ஒருவர் சஞ்சு சாம்சன் கேள்வி எழுப்பினார். அதற்கு பதில் அளித்து சாம்சன் கூறியதாவது, அவர்கள் என்னை அழைக்கும் போது நான் விளையாட செல்ல வேண்டும். அழைக்கவில்லை என்றால் பரவாயில்லை. அணி நன்றாக செயல்படும் போது அதைப்பற்றி நான் அதிகமாக சிந்திக்கக்கூடாது. நான் நேர்மறையாக இருந்து என்னால் என்ன செய்ய முடியுமோ அதில் கவனம் செலுத்துகிறேன்.

அதேசமயம்கடினமாகஉழைத்துஎன்னுடையஆட்டத்தைமுன்னேற்றுவதற்குஅதிகப்படியானபயிற்சிகளை எடுக்கிறேன். அந்த வகையில் என்னுடைய கெரியரை நான் முன்னோக்கி எடுத்துச் செல்ல விரும்புகிறேன். என்னுடைய கட்டுப்பாட்டில் இருக்கும் விஷயங்களில் மட்டும் கவனம் செலுத்தி எனது ஆட்டத்தை முன்னேற்ற விரும்புகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

# வினேஷ் போகத் வழக்கில் தீர்ப்பு ஒத்திவைப்பு



பாரீஸ் ஒலிம்பிக் மல்யுத்தஇறுதிப் போட்டியில் இருந்து இந்திய வீராங்கனை வினேஷ் போகத் தகுதி நீக்கம் செய்யப்பட்டார். 100 கிராம் உடல் எடை கூடியதாக கூறி எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையால்கடும்அதிர்ச்சிஅடைந்தவினேஷ் போகத், இனி என்னிடம் போராட சக்தியில்லை எனவும் மல்யுத்த போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாகவும் அறிவித்தார். இந்த நிலையில், இறுதிப்போட்டிக்கு முன்பாக தகுதிநீக்கம் செய்யப்பட்ட வினேஷ் போகத் அதை எதிர்த்து சர்வதேச விளையாட்டு நடுவர் மன்றத்தில் முறையிட்டார். . இறுதிப்போட்டிக்கு முன்பு வரை தனது எடை சரியாக இருந்ததால் வெள்ளிப்பதக்கம் வழங்க வேண்டும் என்றும் அதில் கூறியுள்ளார். இந்த நிலையில், வினேஷ் போகத் விவகாரத்தில் அனைத்து தரப்பிடமும் விசாரணை நடத்தப்படும் என சர்வதேச விளையாட்டு நடுவர் மன்றம் அறிவித்தது. மேலும் .வினேஷ் போகத் விவகாரத்தை நீதிபதி அனபெல் பெனட் விசாரிப்பார் என தெரிவிக்கப்பட்டது. அதன்படி வழக்கு விசாரணை இந்திய நேரப்படி நேற்று மாலை நடந்தது.

விசாரணை தொடங்கியபோது வினேஷ் போகத் தரப்பில் இந்தியாவின் மூத்த வழக்கறிஞர் ஹரீஷ் சால்வே ஆஜராகி வாதங்களை முன்வைத்தார். இதையடுத்து வழக்கு தீர்ப்பு இன்று வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. அதன்படி இன்று வினேஷ் போகத் வழக்கில் தீர்ப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில தீர்ப்பு நாளைக்கு ஒத்திவைக்கப்பட்டது. பாரீஸ் நேரப்படி நாளை மாலை 6 மணிக்குள் தீர்ப்பு வழங்கப்படும் என சர்வதேச விளையாட்டு நடுவர் மன்றம் உத்தரவிட்டுள்ளது.


# மேஜர் தயான் சந்த் சிலைக்கு மரியாதை செலுத்திய இந்திய ஆக்கி வீரர்கள்



பிரான்ஸ் நாட்டின் பாரீஸ் நகரில் ஒலிம்பிக் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில், ஆண்கள் ஆக்கி போட்டியில் வெண்கல பதக்கத்துக்கான ஆட்டத்தில் இந்தியா ஸ்பெயின் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் 21 என்ற புள்ளி கணக்கில் இந்தியா வெற்றி பெற்று வெண்கல பதக்கம் வென்றது.

பாரீஸ் ஒலிம்பிக்கில் வெண்கல பதக்கம் வென்ற இந்திய ஆக்கி அணியினர் இன்று தாயகம் திரும்பினர். அவர்களுக்கு டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து டெல்லியில் உள்ள இந்திய ஆக்கி ஜாம்பவான் மேஜர் தயான் சந்த் சிலைக்கு இந்திய ஆக்கி வீரர்கள் மரியாதை செய்தனர்.

# 2036ல் இந்தியாவில் ஒலிம்பிக் நடந்தால் நன்றாக இருக்கும் நீரஜ் சோப்ரா




33வது ஒலிம்பிக் போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடந்து வருகிறது. இதில் ஆண்களுக்கான ஈட்டி எறிதல் இறுதி சுற்றில் கடந்த டோக்கியோ ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற இந்தியாவின் நீரஜ் சோப்ரா உள்பட 12 வீரர்கள் பங்கேற்றனர். மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இந்த போட்டியில் பாகிஸ்தானின் அர்ஷத் நதீம் வியப்பூட்டும் வகையில் 92.97 மீட்டர் தூரம் எறிந்து புதிய ஒலிம்பிக் சாதனை படைத்தார். அதோடு அவர் தங்கப்பதக்கத்தையும் தட்டிச் சென்றார். நீரஜ் சோப்ரா தனது அதிகபட்சமாக 89.45 மீட்டர் தூரம் வீசினார். இதனால் இந்தியாவின் நீரஜ் சோப்ரா 89.45 மீட்டர் தூரத்துடன் 2வது இடம் பெற்று வெள்ளிப் பதக்கம் வென்றார்.

இந்த நிலையில், 2036ல் இந்தியாவில் ஒலிம்பிக் நடந்தால் நன்றாக இருக்கும் என நீரஜ் சோப்ரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது,

2036ல் இந்தியாவில் ஒலிம்பிக் நடந்தால் நன்றாக இருக்கும் .இது இந்திய விளையாட்டுக்கு மிகவும் நல்லதாக அமையும். எங்கள் ஆட்டத்தை நம் மக்கள் நேரலையில் பார்ப்பது நன்றாக இருக்கிறது. எங்கள் ஆட்டத்தைப் பார்ப்பதற்காகவே சீக்கிரம் எழுந்து தாமதமாக தூங்குகிறார்கள். இது இந்திய விளையாட்டு மாறியதற்கான அறிகுறிகளில் ஒன்று. என தெரிவித்தார்.



**நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்**

**போற்றாது புத்தே ளுலகு**

**விளக்கம்:**

நிலவுலகின்எல்லையில்நெடுங்காலம் நிற்கவல்லபுகழைச்செய்தால்,வானுலகம் (அவ்வாறு புகழ் செய்தாரைப் போற்றுமே அல்லாமல்) தேவரைப் போற்றாது.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.